THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W. 2)**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 07.12.2022. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்–209/2016

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில் முருகன் | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா.2 முதல் விசாரணை

நான் தற்போது கப்பலூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். பளக்காபுதுப்பட்டி கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பில் உள்ளேன். நீதிமன்றத்திலிருந்து வரபெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். UDR காலத்து அ பதிவேட்டை தற்போது கொண்டுவந்துள்ளேன். புல எண். 21/22 ற்கு பழைய புல எண் என்ன என்றால் 21/4A1A ஆகும். புல எண். 21/22 யாருடைய பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் பட்டா எண். 314 ல் கிருஷ்ணன் மகன் முருகன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. சர்வே எண். 21/22 ஐ காட்டக்கூடிய அ பதிவேட்டின் உண்மை நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**புல எண். 21/22 ஐ காட்டக்கூடிய அ பதிவேட்டின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட உண்மை நகல் சா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பட்டா எண். 314 ற்குரிய 10(1) சிட்டா பதிவேட்டை தற்போது கொண்டுவந்துள்ளேன். அதனை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**பட்டா எண். 314 ஐ காட்டக்கூடிய சிட்டா பதிவேட்டின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட உண்மை நகல் சா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

புல எண். 21/22 ற்கான புல வரைபடத்தை தற்போது கொண்டு வந்துள்ளேன். அதனை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**புல எண். 21/22 ற்கான புல வரைபடத்தை காட்டக்கூடிய புல வரைபட பதிவேட்டின் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட உண்மை நகல் சா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

புல எண். 21/22 ற்கான 1432 பசலி ஆண்டிற்கான அடங்கள் கணக்கை தற்போது கொண்டு வந்துள்ளேன். அதனை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.(**புல எண். 21/22 ற்கான 1432 பசலிக்கான அடங்கள் கணக்கின் உண்மை நகல் சா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

புதிய சர்வே எண். 21/22 என்பது பழைய சர்வே எண். 21/4A1A வில் இருந்து உட் பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் எப்போது இருந்து பளக்காபுதுப்பட்டி கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பில் இருந்து வருகிறேன் என்றால் 06.10.2022 ம்

தேதியிலிருந்து கூடுதல் பொறுப்பில் இருந்து வருகிறேன். தாவா சொத்து அமைந்துள்ள ஊர் எது என்றால் பளக்காபுதுப்பட்டி ஆகும். தாவா சொத்திற்கு உச்சப்பட்டிக்கும் சம்பந்தமுள்ளதா என்றால் பளக்காபுதுப்பட்டி கிராமம் உச்சப்பட்டி பஞ்சாயத்தில் கட்டுப்பட்டதாகும்.

எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் சர்வே எண். 21/19 க்கு தொடர்புடைய ஆவணங்களை கொண்டுவர சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட சர்வே எண். 21/19 தான் தற்போது சர்வே எண். 21/22 ஆக மாற்றப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு மாற்றப்படவில்லை. சர்வே எண். 21/4A1A மற்றும் 21/4A1B1B ஆகிய புல எண்கள் தற்போதைய புல எண்ணா அல்லது பழைய புல எண்ணா என்றால் தற்போதைய புல எண்கள் ஆகும். சர்வே எண். 21/19 ற்கும் சர்வே எண். 21/4A1A மற்றும் 21/4A1B1B ஆகிய சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண். 21/22 என்பது தற்போது உள்ள புல எண்ணா அல்லது பழைய புல எண்ணா என்றால் தற்போது உள்ள புல எண் ஆகும். சர்வே எண். 21/4A1A யில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்டு ஒரு பகுதிக்கு சர்வே எண். 21/22 கொடுக்கப்பட்டுள்ளது. பட்டா உட்பிரிவு செய்யப்பட்டதற்கான உத்தரவை பார்த்தால்தான் எந்த எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று ஆதாரபூர்வமாக தெரியவரும் என்றால் சரிதான்.

சா.சா.ஆ 2 ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சர்வே

எண். 21/22 என்பது எப்போது இருந்து நடைமுறையில் உள்ளது என்றால் அதற்கான உத்தரவை பார்த்தால்தான் சொல்ல முடியும். சர்வே எண். 21/19A1 ல் இருந்து சர்வே எண். 21/22 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று காட்டுவதற்கு எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். உட்பிரிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்களை பார்த்தால் சொல்ல முடியும்.